**சுருக்கம்**

பொங்கல் கருணைத் தொகை– ஊராட்சிகளில் பணியாற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2009–2010ஆம் ஆண்டுக்கு பொங்கல் கருணைத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5) துறை

அரசாணை (2டி) எண்: 4

நாள்:11.01.2011.
திருவள்ளுவர் ஆண்டு 2041
மார்கழி:27

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண். 1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.01.2010.
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் நேர்முக கடித எண். 54923/2010/இ2, நாள் 06.01.2011.

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகிய ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2008–09–ஆம் ஆண்டுக்கு பொங்கல் கருணைத்தொகை வழங்கப்பட்டது போல் 2009–10–ஆம் ஆண்டுக்கு பொங்கல் கருணைத் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்தது.

2. ஊராட்சிகளில் 2009–10ஆம் ஆண்டில் 240 நாட்கள் மற்றும் அதற்கு மேலாக பணிபுரிந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2009–10–ஆம் ஆண்டு பொங்கல் கருணைத் தொகையாக ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) சம்பந்தப்பட்ட ஊராட்சி நிதியிலிருந்து வழங்க அனுமதித்து அரசு ஆணையிடுகின்றது.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.112/FS/P/2011 நாள்: 10.01.2011–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர், சென்னை-15.

...2

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், (சென்னை நீங்கலாக)
மாநில கணக்காயர் , சென்னை –18/35
மாநில கணக்காயர் , சென்னை –18/35 (பெயரிடப்பட்ட கடித உறையில்)
கருவூலக் கணக்குத் துறைத் தலைவர், சென்னை–15
உள்ளாட்சிநிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கா. சிதம்பரம்
பிரிவு அலுவலர் 11/01/2011